
காமாக்ஷி துணை

# ஸத்குரு நித்ய தரிசனம்



ஸ்ரீ காமகோடிபீடம் திருக்கோயில் காஞ்சீபுரம்.

1933

REPRINTED WITH PERMISSION AT THE GOWRY PRESS, TRIPLICANE, MADRAS.

Sri Sankara Bhagavathpathacharya, the founder of the Kamakoti Peetam and the first exponent of the Advaitha Philosophy—the life-size likeness in the shrine of the Kamakoti Peetam at Conjeevaram.



உலகுக்கு அத்வைதமென்ற பரம ஔஷதத்தைத்தந்து, ஸ்ரீகாமகோடி பீடத்தை ஸ்தாபித்த, ஸ்ரீசங்கர பகவத் பாதாசாரியாளின் ஸ்ரீகாமகோடி பீடம் திருக்கோயிலிலிருக்கும், ஜீவய உருவம்.

Sri Sureswaracharya, the 2nd Acharya of the Peetam.



ஸ்ரீபகவத் பாதாளின் ஸாக்ஷாத் சிஷ்யரும், காமகோடி பீடாதிபதிகள் ஆராதித்துவரும் கைலாஸத்து ஸ்படிகலிங்கத்தை ஆசார்யாளிடமிருந்து பெற்றவருமான, ஸுரேச்வராசார்யாள்.

“இந்த விழிப்பிற்கும் ஞானத்தால் ஒரு விழிப்பு ஏற்பட்டால் அப்பொழுது இந்த விழிப்பில் காணப்படும் 1000 கணக்கான பொருள்களும் மறைந்து, இப்பொழுது நானென்று சொல்லும் ஆத்மப் பொருளே பாக்கி நிற்கும். இந்த திருஷ்டாந்தத்தை அறிவு படுத்தவே ஈச்வரன் ஸ்வப்னத்தை ஸிருஷ்டி செய்திருக்கிறார்.”

Sri Mahadevendra Saraswathi Swami the 65th Acharya.



பீடத்தில் 65-வது ஆசார்யாளாக வீற்றிருந்த ஸ்ரீமகா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள். இவர்கள் ஜகந்நாதம் வரையாத்திரை செய்து, ஸ்ரீசந்திரமௌளீச்வர பூஜாங்கமான பிராம்மண ஸந்தர்ப்பணத்தில் விசேஷ சிரத்தையை வைத்து, அநேக தான தர்மங்களைச் செய்து ஜனங்களை அநுக்ரஹித்தார்கள். இவர்களின் அதிஷ்டானம் இளையாத்தங்குடி என்ற ஊரிலிருக்கிறது.

Sri Chandrasekharendra Saraswathi Swami
the 66th Acharya




காமகோடி பீடத்தில் 66-வது ஆசார்யாளான ஸ்ரீசந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீசந்திர மௌளீச்வர திரபுரஸுந்தரி ஆராதனத்தில் விசேஷமான திருப்தியை இவர்கள் ஸதா அனுபவித்து வந்தார்கள். இவர்கள் அதிஷ்டானம் ஆற்காடு ஸமீபத்திலுள்ள கலவை என்ற ஊரிலிருக்கிறது. இந்த ஊரில்தான் நமது இப்பொழுதிய ஆசாரியாள் பீடாரோஹணம் செய்தது.

*  *  *  *  *

“அத்வைதமே ஸத்யம். எல்லாம் அத்வைதமாகவே இருக்கிறது; த்வைதமாகவே தோன்றுகிறதே யல்லாமல் த்வைதமில்லை; கண்ணினால் த்வைதம் காணப்படுகிறது, சாஸ்திரத்தால் அத்வைதம் அறியப்படுகிறது உள்ளதை வேறாகப் பார்க்கிறோம், உள்ளதை உள்ளபடி பாப்பதே அத்வைதம்.”

His Holiness the present Acharya at Tanjore.
1909.



1909ஸ் நமது ஆசார்யாள் ஜம்புகேச்வரம் அகிலாண்டேச்வரியின் ஆலய கும்பாபிஷேகத்துக்கு யாத்திரையாய் வரும் பொழுது தஞ்சைமா நகரில் கடைசி அரசரான His Highness சிவாஜி மஹாராஜா அவர்களின் தர்ம பத்நி Her Highness ஜீஜாம்பா என்ற வராஹி பாயிஸாஹேபு அவர்களாலும் அவர்களின் ஸ்வீகாரபுத்ரவம்சத்து ஸ்ரீசிவாஜீ, ப்ரதாப்சிங் இவர்களாலும் பூஜிக்கப்பட்ட காக்ஷி.

"தைல தாரை போல் ஒன்றையே நினைக்கவேண்டும். மனதை அப்படிப் பக்குவப்படுத்துவதற்கு யோகமென்று பெயர். யோகம் யாரோ ரிஷிகளுக்கல்ல. நாம் சும்மாவிருக்கக் கூடாது. மருந்து வியாதியஸ்தர்களுக்கே. நாமெல்லோருமே வியாதிஸ்தர்கள்."

சென்னை—16-10-32.

# HIS HOLINESS IN 1914 KUMBAKONAM.

திருமயிலையில் ஸ்ரீ ஸ்வாமிகள்.

"அத்வைதம் என்றால் என்ன? அதனால் நமக்கென்ன உபயோகம் என்று கவனிப்போம். அத்வைதம் என்பதற்கு இரண்டாவது இல்லை என்பது அர்த்தம். அநேகக்கணக்கான பொருள்கள் இருக்கையில் இரண்டாவது இல்லை என்று வைத்துக்கொண்டாலும், நமக்கென்ன பலன் என்று கேட்கலாம். நம்முடைய லட்சியம் கை கூடும்படி அத்வைதம் செய்யும். நாம் பல காரியங்களைச் செய்கிறோம். கஷ்ட நிவர்த்திக்காகப் பாடுபடுகிறோம். பசி, தரித்திரம் அவமானம், வியாதி மனஸ்தாபம் இவை கஷ்டங்கள். இந்தக் கஷ்டங்களைப் போக்க, நாம் படும் பாட்டினால் நிவர்த்தி அடைந்ததுண்டா? பசி தரித்திரம் முதலானவை இல்லாத ஊரி



1914ஞத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கும்பகோணம்.

ல்லை. எல்லோரும் பிரயத்த
படுகிறார்கள். நிரந்தர உபா
அத்வைதமே. பசி, பயம், போ
திக்கம், சாவு முதலியன வர
அத்வைதம் செய்யும். ஏன்
கப்படுகிறோம்? பசி, தா
வியாதி முதலியன உடம்பு
வரையில் உண்டு. உடம்பி
மல் செய்வதெப்படி? நா
மரணமடைந்தால் அந்த
மூள்படச் சேர்ந்து ஒரு உட
வரும். உடம்பு எதனால் வந்த
பாபம் செய்தோம், அல்லது
ணியம் செய்தோம் அதை
பவிக்க ஆத்மாவால் முடியா
உடம்பை ஆத்மாவுக்குக் கெ
த்து அந்த உடம்பு தானென
நினைத்துக் கொள்ளும்படி செ
ஸ்வாமி தண்டிக்கிறார்."

65th, 66th, and 68th, Acharyas.



65, 66, 68வது ஆசார்யர்கள்.

“பரமசிவனுக்கு பசுபதீச்வரன் என்று பெயர். பசு நாம்தான். ஈச்வரன் பதி. நம்முடைய ஆசை சிருஷ்டி யெல்லாம் போதாது என்று சொல்லும். பூலோகத்திலுள்ள ஸகல ஐச்வர்யத்தையும் கொடுத்தாலும், செவ்வாய் சுக்கிரன் முதலிய கிரகங்களிலுள்ள ஐச்வர்யத்தைப் பிடிக்க ஆசைப் படுவோம். ஆகையால் நமக்குப் பலவித ஆசைகள் பிடித்திருப் பதால் நம்மை ஈச்வரன் கட்டிபோட்டிருக்கிறார். ஆசையை ஒழித்த தினமே ஈச்வரன் பாசத்திலிருந்து அவிழ்த்து விடுவார்.

சென்னை—17-10-32.

His Holiness at Udayarpalayam (Trichy Dt.) 1926.



உடையார்பாளையத்தில் ஸ்ரீஸ்வாமிகள், 1926.

*　　*　　*　　*　　*

"நமது குழந்தை கூரையில் தீவைத்துவிட்டால் நமக்குக் கோபமுண்டாகாது. அப்படியே எல்லோரிடமும் அந்த மனோபாவமுண்டாக வேண்டும். ஒருவர் கஷ்டப்படும்படி வார்த்தைகள் சொல்லக்கூடாது. அஹிம்ஸையின் முக்ய பலன் "அடக்கம்".

சென்னை—16-10-32.

The Jagathguru Mutt at Jambugeswaram, (Tiruvanaikavl) near Trichy.—containing inscriptions of the Chola Kings,—in which the Jagathguru Vidyasthanam for imparting instruction in "Atma-Vidya" is being conducted.




புண்ய ஸ்தலங்களில் சிறந்த ஜம்புகேச்வரம் என்னும் திருவானைக்காவலில் சோளதேச ராஜாக்களின் சிலாசாஸனங்களையுடையதும், கருங்கல்லா லமைக்கப் பட்டதும் ஸ்ரீ காஞ்சி முதலியவிடங்களிலுள்ள மடங்களைப் போன்ற அநாதியான மடம். ஆத்மவித்யை உபதேசிக்கவென்று நமது ஆசாரியாளால் ஸ்தாபிக்கப்பட்ட வித்யாஸ்தானம் இதில் நடைபெற்று வருகிறது.

His Holiness at Udayarpalayam (Trichy Dt.) 1926.





ஸ்ரீஸ்வாமிகள் தென்தேசத்தில் உடையார்பாளையம் ஸமஸ்தானாதிபதியின் ஆதரவில் 1926௵த்தில் சுமார் 15 தினங்கள் அவ்வூரில் விஜயம் செய்திருந்தார்கள்.

* * * * *

"வாக்கும் மனதும் ஒரேவிதமாக இருப்பது ஸத்யம். ஊரிலுள்ளவர்களின் பிசகையெல்லாம் சொல்லிகொண்டேயிருப்பது சத்தியமல்ல."


சென்னை—16-10-32.

The Athishtanam of "Bodhendraswami
at Govindapuram,
near Tiruvadamarudur, S.I.Ry.




ஸ்ரீபகவந்நாமஸித்தாந்தம் செய்த ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானம், தென்னிந்திய ரயில் பாதையில் திருவிடைமருதூர் ஸ்டேஷனுக்கு ஸமீபத்திலுள்ள, கோவிந்தபுரம் என்னு மிடத்திலுள்ளது. இதை யொட்டி பஜனை மடம் ஒன்றிருக்கிறது. பாகவதர்கள் இவ்விடத்தில் பகவத் பஜனம் செய்துவருவதுடன் வருஷம் தோறும் ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகளின் ஆராதனத்தையும் நடத்தி வருகின்றனர்.

His Holiness performed his Chathurmasyam for 1920 in Mayavaram, Tanjore Dt.



1920ஸு சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை ஸ்ரீஸ்வாமிகள் மாயூர க்ஷேத்திரத்தில் முடித்தார்கள்.


* * * * *

"இன்பத்துக்குச் சாதனமாக வேண்டுவது பொருள். ருசியாகச் சாப்பிடலாம். அது ஒரு சந்தோஷம்—ஜீரணமானவுடன் அந்த இன்பம் போய்விடும். சங்கீதம் கேட்பதால் உண்டாகும் இன்பமும் அப்படியே; மறுபடி கச்சேரி கேட்க போக வேண்டியிருக்கும். நமக்கு ஒரு நல்வரவு பத்திரம் வாசித்துக் கொடுத்தால் அது ஒரு சந்தோஷம். அது சிறிது நேரமே யிருக்கும். நான்கு பேர்கள் அதை "ஒப்புக்கொள்ளவில்லை" என்றால் சந்தோஷம் போய் விடுகிறது. இந்த இன்பத்திற்கெல்லாம் ஆதாரம் பொருள்; இது சாச்வதமல்ல."

சென்னை—19-10-32.

His Holiness at Nagar, Trichy Dt., 1924.

திருச்சி சமீபம் நகரில் ஸ்ரீஸ்வாமிகள், 1924.



"நமக்குத் தோன்றும் வஸ்துக்களுடைய ஸ்வரூபங்களெல்லாம் நம்முடைய கண்ணைப் பொருத்திருக்கின்றன. கண்ணில் உள்ள "லென்சு" என்னும் ஒரு கருவியால் பார்க்கிறோம்; நமக்கு ஒரு வஸ்து ஒரு சாணுள்ளதாகத் தோன்றுகிறது. நம்முடைய கண்ணிலுள்ள "லென்சு" வேறுவிதமாகவிருந்தால் அதே ஒரு முழமாகவும் தோன்றலாம். ஆகையால் நாம் பார்ப்பது நிஜப்பார்வையென்று எண்ண முடியவில்லை. இதைத்தான் வேதாந்தம் "திருஷ்டி ஸ்ருஷ்டி வாதம்" என்று சொல்லுகிறது."

சென்னை—20-10-32.

His Holiness at Udayarpalayam 1926.



உடையார்பாளையத்தில் ஸ்ரீஸ்வாமிகள், 1926.

*  *  *  *  *

"மற்ற மதத்தினவர்கள் அவரவர் எந்தெந்த மதத்தில் பிறந்தாரோ அந்த மதத்தைப் பற்றிய படிப்பை இரண்டொரு வருஷம் படித்துவிட்டு அப்புறந்தான் மற்ற படிப்பு படிக்கிறார்கள். நமது மதத்தை நாம் அவ்விதம் படிக்கிறதில்லை. அதற்குப் பலன் என்னவென்றால் இதர மதங்களுக்கு ஆள் சேர்க்கவேண்டுமானால் நம்முடைய மதத்திலிருந்து பிடித்துக்கொள்கிறார்கள். என்? நம்மவர் மதத்தைப் படிக்கிறதில்லை. பாக்கி மதங்களுக்கு இந்த ஹானியில்லை. தன்னைத்தானே நாசம் செய்து கொள்வது நமது மதத்தினரிடத்தில் தானுண்டு! அவ்வளவு அழகாக நாமிருக்கிறோம்!! இவைகளுக்கு பரிகாரம் பண்டை காலத்துத் திண்ணைப் பள்ளிகூடப் படிப்பும் புராண சிரவணங்களுமே."


சென்னை—19-10-32.

His Holiness at Kanjicode (Malabar) 1927.

ஸ்ரீஸ்வாமிகள் கஞ்சிக்கோட்டில் பல சிஷ்யர்களுக்கு உபதேசித்தார்கள்.

"பொருளால் உண்டாகும் சந்தோஷம் சிறிது காலமே இருக்கக்கூடியது. நிரந்தரமான இன்பம் வீடு (மோக்ஷம்). இவ்விரண்டும் புருஷார்த்தம்; வீட்டின் (மோக்ஷத்தின்) ஸ்வரூபம் தெரியாததால் அதை நாம் விரும்புகிறதில்லை. ஆகையால் எப்பொழுதும் இன்பத்தையே தேடுகிறோம். வேண்டுமென்று நினைக்கப்படுவது இன்பம். வேண்டுமென்று நினைக்கப்பட வேண்டியது வீடு (மோக்ஷம்)."

சென்னை—19-10-32.



His Holiness at Kanjicode (Malabar) 1927.



1927 ௵ சாதுர்மாஸ்யத்தை மலையாளப் பிராந்தியம் நல்லிச்சேரி மகாளீஸ்ரீ ஸ்ரீ N. L. சிவராம ஐயர் வகையறாக்களுடைய எஸ்டேட்டின் கஞ்சிக்கோடு சத்திரத்தில் நிறைவேற்றினார்கள்.

*　　*　　*　　*　　*


“உடம்புக்குக் காரணம் புண்ய பாபம். இனி பாவம் செய்யாமலிருப்போமென்று நினைக்கிறோம். வெகுநாளாக அப்படியேதான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்; ஆனால், நிறுத்தினபாடில்லை.

பாவ புண்யத்திற்குக் காரணமென்ன? ஆசை. அதைத் திருப்தி செய்யக் குறுக்குவழியில் போகையில் பாவம் சம்பவிக்கிறது. ஆசையை விட்டு விடுவோமே எனில், அது நமது கையில் இல்லை. அழகானபதார்த்தம் ஆசையை உண்டாக்குகிறது. இந்திரியம் விஷயத்தை அறிகிறது. உடனே ஆசை தானாக உண்டாகிறது. ஞானம் இச்சை கிரியா என்பர். ஆசை பிரயத்தனத்தால் வருவதுமல்ல. விடக்கூடியதுமல்ல.

விஷயம் (பொருள்) அழகாக இருப்பின் ஆசை தானாக உண்டாகிறது. பிறகு பிரயத்தனம் உண்டாகிறது.

அப்பொழுது குறுக்கு வழியில் போகிறோம், பாவம் செய்கிறோம். பகவான் தண்டிக்கிறார்.”

## His Holiness in Malabar.



ஸ்ரீ ஸ்வாமிகள் மலையாள ப்ராந்த்யத்தில் யாத்திரை செய்து அவ்விடத்து பிரமுகர்களால் ஆதரிக்கப்பட்டார்கள்.

*　　*　　*

"புராணசிரவணத்தால் நமக்கு நல்ல குணங்களும் சித்த சுத்தியும் ஏற்படும்."

His Holiness at Pudisseri (Malabar) 1927.




ஸ்ரீஸ்வாமிகள் 1927ஷு சாரதா நவராத்திரி மஹோத்ஸவத்தை மலையாளப் பிராந்தியம் புதிஸ்ஸேரியில் ஸ்ரீமான் வி.ஐ. மண்ணாடியார் எஸ்டேட்டில் நிறைவேற்றினார்கள்.

*　　*　　*　　*　　*

“ காதில்கேட்டது காதிலேயே வரண்டுபோகும். மணலில்விட்ட ஜலம்போல் அப்படியே இன்பங்கள் வரண்டுபோய் விடும். இன்பங்களின் தன்மை இப்படிப்பட்டது. பேரின்பமே நிலையானது.”

சென்னை — 19-10-32.

## His Holiness at Vadakkanthorai (Malabar)
## 1928-29.



ஸ்ரீஸ்வாமிகள் மலையாளதேசத்தில் தீர்த்த யாத்திரை செய்தார்கள். அநேக புண்யக்ஷேத்திரங்களில் நேராடிப் பகவானைத் தரிசித்து வந்தார்கள்.


* * * * *

"சத்யம் பேசியே பழக்கம் செய்துவிட்டால் வாக்கிலிருந்து ஒருவார்த்தை வந்துவிடின் அப்படியே நடந்துவிடும். சாபம் பலிக்கும், அநுக்ரகம் பலிக்கும்."

சென்னை—16-10-32.

## His Holiness in Tiruvannamalai, 1929–30.


திருவண்ணாமலையில் ஸ்ரீ அருணாசலேச்வரரை ஆசார்யாள் தர்சித்தாகள். நிஷ்டையிலிருக்கும் அவசரம்.



"ஜெயிலுக்குப்போனவன் விடுதலை அடைந்துவிடின் வரவேண்டிய இடம் வீடு. அது தான் சொந்த இடம். நாம் இப்பொழுது சிறையிலிருக்கிறோம். இப்பொழுது எங்கு இருக்கிறோம்? இரத்தத்திலிருக்கிறோம். மாம்ஸத்திலிருக்கிறோம். ரோமத்திலிருக்கிறோம். இதெல்லாம் நன்றாகவிருந்தால் நாம் நன்றாக இருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறோம். இந்த சந்தோஷம் எல்லையுள்ளது. நீடித்திருக்கவில்லை. இதிலிருந்து விடுப்பட்டு வீட்டிற்கு ( மோக்ஷத்துக்கு ) போக வேண்டும்."

சென்னை— 19-10-32

Marukkumpattu, 1931. மருக்கம்பட்டு, 1931.




"நாம் எவ்வளவோ படிக்கின்றோம், கேட்டிருக்கிறோம். ஆயினும் மாயா கபட வஞ்சகங்களை விடவில்லை. ஏனெனில் சித்தத்தைப் பக்வப்படுத்திக் கொள்ளவில்லை. கர்மாக்கள் நம் மனதைப் பக்வப்படுத்தும்."

* * * * *

"தேகம் ஒரு தேவாலயம். கோயிலில் மகாலிங்கம் இருப்பதுபோல் தேகத்தில் ஜீவன் இருக்கிறான்."

சென்னை—24-11-32.

## Chathurmasyam and Sarada Navarathri at Chittoor, 1931.





சித்தூரில் 1931-வது வருஷம் நமது ஆசாரியாள் சாதுர் மாஸ்யமும், நவராத்திரியும் நடத்தினார்கள்.

* * * * *

“பக்தி தற்கால உபசாந்தி. ஆனால் வேதாந்தம் துக்கத்தை ஒழிக்கவழி சொல்லுகிறது. ஆசையோ, துவேஷமோ நம்மைத் தவிர மற்றொரு பொருளிருக்கிறது என்ற நினைவினால் உண்டாகிறது. அந்யமில்லையாயின் அதை அடைய வேண்டியதுமில்லை; துவேஷிக்க வேண்டியதுமில்லை. இரண்டாவது இருப்பின் பயமுண்டு என்று உபநிஷத்துகள் சொல்லும். இரண்டாவது இல்லாது செய்துவிடின் ஆசை, துவேஷம், பயம்முதலியன இல்லை. அதற்கு வழி என்ன? அதுதான் அத்வைதம். விஷயங்கள் ஆயிரக் கணக்காகத் தோன்றுகின்றன. இரண்டாவது இல்லாது எப்படிச் செய்ய முடியும்? தோன்றும் பொருள்கள் பொய் என்று வேதாந்தம் சொல்லுகிறது. எல்லாம் ஈச்வர ஸ்வரூபம், ஆதலால் ஈசனைத் தவிர வேறாகத் தோன்றுகிறது பொய். ஞானிகளுக்குச் சிவனாகத்தோன்றுவது மெய்.”

சென்னை—11-10-32.

His Holiness at Tirupati, 1932.




ஸ்ரீ ஆசாரியாள் 1932ஹு த்தில் திருப்பதியில் ஸ்ரீவெங்கடேசரைப்போய் தர்சித்தார்கள்.

---

“சிவனை வைகின்ற வைஷ்ணவர்களும், விஷ்ணுவை வைகின்ற சைவர்களும் உண்மையை யறியாமல் ஏமாந்து போனவர்கள். ஒன்றாயிருக்கும் பொருளை இரண்டென நாமாகத் தீர்மானித்துக் கொண்டு, எது உயர்ந்தது என்று விசாரித்துக் கொண்டிருப்பது தாமாக உண்டாக்கிக் கொண்ட பிராந்தியே.”

H. H. performed the Maha Kumbabhishekam in 1932 to the temples at "Bugga" near Nagari, (M.S.M.Ry.) a place of pilgrimage akin to Benares in sanctity.



M.S M.Ry. நகரி ஸ்டேஷனக்கடுத்த "புக்கை" என்ற காசிக்கொப்பான புண்ணிய க்ஷேத்திரத்தில் தேவாலயங்களுக்கு ஆசார்யாள், 1932௵த்தில் கும்பாபிஷேகம் நடத்திவைத்தார்கள்.

* * * * *

"கர்மானுஷ்டானங்களால் நாம் மனதை உழவேண்டும். ஜலம் ஆசாரிய பக்தி. அதைப்பாய்ச்ச வேண்டும். பெரியோர்கள் ஸன்னதியில் மனம் பக்வமடைகிறது. ஆகையால்தான் ஆசாரிய முகமாக உபதேசத்தைக் கேட்கவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்."

சென்னை—24-10-32.

His Holiness in the Mylapore Sanskrit College 1932.



ஸ்ரீ ஸ்வாமிகள் 1932-ம் வருஷம் சென்னைக்கு விஜயம் செய்து வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மைலாப்பூர் ஸமஸ்கிருத காலேஜில் $2\frac{1}{2}$ மாதம்வரை தங்கி சாரதா நவராத்ரி மஹோத்ஸவத்தையும் நடத்தி அனேக உபந்யாஸங்கள் செய்தார்கள்


* * *

"பசுமாட்டின் கன்று தாயை நினைத்துக்கொண்டு 'அம்மா' என்று கத்துவது பரிதாபமாகவிருக்கிறது. கன்றின் அழுகை, தாயைக்காண அதற்குள்ள ஆவலைக்காட்டுகிறது. அப்படியே, நமது தாயாகிய அம்பிகையை 'எப்பொழுது காண்போம், எப்பொழுது காண்போம்' என்ற ஆவலுள்ளவர்களாயிருப்போமாயின், அவள் அநுக்ரகம் செய்வாள்."

சென்னை—21-11-32.

His Holiness at Mylapore, 1932.


மைலாப்பூர்.



"ஜபம் முதலிய ஆத்மார்த்த காரியங்களைச்செய்ய சித்தம் ஒருமைப்படவேண்டும். அதற்கு மூச்சைப் பிடித்துக் கொள்வது சாதனம். ஆனால் நாம் மூக்கைப்பிடித்துக் கொள்ளுகிறோம். அது தப்பு. மனது ஒருமைப்படின், மூச்சு தானாக நிற்கும். நாம் ஒரே நினைவாக ஒருபெரிய விஷயத்தை சிலநிமிஷங்கள் நம்மை அறியாது அழுத்தமாக நினைத்தோமானால், அந்த நினைவு முடியுந் தருணத்தில் நமக்கு ஒரு பெருமூச்சு வருகிறது. அதனால் மனது ஒருநிலையிலிருந்தால் அதுவரை மூச்சும் ஒருநிலையாக நின்றிருக்கிறது என்றுதெரிகிறது. அதுபோல் மூச்சுநிற்கின் மனது ஒருமைப்படும்."

சென்னை—23-11-32.

## His Holiness Visited the P. S. High School, on arrival at Mylapore.



சென்னை மைலாப்பூரில் ஸ்ரீ ஆசார்யாள் விஜயம் செய்த வுடன் மதக்கல்வி போதிக்கப்படுவதர்கு தான் உதவி செய்து வரும் பி. எஸ். பாடசாலைகளை பார்வையிட்டார்கள்

*   *   *   *   *

" அன்ய தேசநூல்கள் நமக்குத்தெரியும், நமது தேசநூல் களை அறியவுமாட்டோம் ; கேள்விப்பட்டதுமில்லை ; யாராவது சொன்னாலும் காதுகொடுத்து கேட்கமாட்டோம். ஆயினும் நமது தேச ஆத்மவித்யையை அன்னிய தேசத்தார்கள் பாராட்டுகிறார்கள். அதற்கு ஆதாரமான கிரந்தங்கள் நமக்குத்தெரியவில்லை. பெயர்கூடத் தெரியாது!! "

His Holiness among his Guzarathi Brahmin Devotees 1932.



ஸ்ரீ ஸ்வாமிகள் சென்னை குஜாரத்பிராம்மண சிஷ்யர்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஏகாம்பரேச்வரர் அக்ரகாரத்தில் சுமார் 20 நாள்கள் வரையில் தங்கியிருந்தார்கள்.

* * * * *

"நாம் எக்கார்யம் செய்யவேண்டியிருப்பினும், பலனைக்கருதாது அதை நம்கடமையாய் நினைத்துச் செய்யவேண்டும்."

## The Ancient Mutt at Conjeevaram.
## Head quarters prior to 1741 A.D.

காஞ்சீபுரத்தில் ஸ்ரீமடம். ஆசாரியர்கள் 174[illegible] வரு வரை இதில் வசித்து வந்தார்கள். பிறகு தமது வாஸ ஸ்தானத்தைக் கும்பகோணத்துக்கு மாற்றினர்கள்.

*　　*　　*　　*　　*


" நீறு தவள (வெளுப்பு) மான நிறத்தையுடையது. வேறு எந்த நிறத்தையும் சுட்டு வெளுப்பாய்ச் செய்யமுடியும். வெளுப்பை வேறு நிறமாய்ச் செய்யமுடியாது. நீறானது இரண்டற்று, தனித்து நிற்கும் பொருளை ஞாபகப்படுத்துவதற்காக தரிக்கப்படவேண்டும்."

சென்னை—11-10-32.



# The Bangaru Amman Thottam, Conjeevaram.

ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆராதனைத்துக்கென்று ஸமர்ப்பிக்கப்பட்ட உத்யானவனம்; காஞ்சீபுரம்.



"நம்மிஷ்டப்படி நமது வாக்கும், கண்ணும், தங்கள் வேலைகளைச் சிலகாலம் நிறுத்திவைக்கும். மனம் அப்படி நிறுத்தாது. அது நமக்கு ஸ்வாதீனமில்லை, புத்திஸ்வாதீனமில்லாதவன் பைத்யம். பைத்யக்காரன் தனது வாக்கை யடக்க முடியவில்லை. நாம் மனதை யடக்க முடியவில்லை. சொன்னபடி மனம் செய்தால்தான், நாம் புத்திஸ்வாதீனமுள்ளவர்கள். வாயும் முற்றிலும் கட்டுப்படுவதில்லை. நமக்கும் பைத்யக்காரனுக்கும் அற்பவித்யாஸமே. வாக்கும் மனதும் முற்றிலும் கட்டுப் பட்டால்தான் பைத்ய நிலையிலிருந்து நாம் தாண்டினவர்களாவோம்."

சென்னை—16-10-32.

## Sri Kamakshi at the Kamakoti Peetam, Conjeevaram.

ஸ்ரீகாமகோடிபீடம் திருக்கோயிலில் ஸ்ரீகாமாக்ஷிஅம்பாள்.

*   *   *   *   *

“நமக்கு ஒவ்வொரு ஜன்மத்திலும் ஒவ்வொரு தாயார். நம்முடைய எல்லாப்பிறப்புகளிலும், ஒவ்வொரு பிராணியின் எல்லாப் பிறப்புகளிலும் ஒரே தாயாராகவிருப்பவள், பரதேவதை.”

சென்னை—21-11-32.



## The Holy Cow and the Elephant worshipped daily in the Mutt.

ஸ்ரீமடத்தில் ஈச்வராம்சமாய் பிரதி தினமும் பூஜிக்கப் பட்டுவரும் "கோ" வும் "கஜ" மும். இந்த யானையும், ஒட்டகமும் உடையார்பாளையம் ஸமஸ்தானதிபதியவர்களால் ஸ்ரீஸன்னிதானத்துக்கு ஸமர்பிக்கப்பட்டு வெகு ஆதரவுடன் ரக்ஷிக்கப்பட்டு வருகின்றன.

* * * * *

"கோவினிடத்திலும் தானிருந்து அதற்குச்செய்யும் பூஜையைத்தான் ஏற்றுக்கொள்வதாகவும் ஸ்வாமி சொல்லியிருக்கிறார்."

சென்னை—24-10-32.



The daily pooja in the Mutt.




ஸ்ரீமடத்தில் சந்திரமௌளீச்வர திருபுரஸுந்தரி பூஜா, வைபவம்.




இந்த புத்தகம் வேண்டியவர்கள் சென்னை திருவல்லிக்கேணி, பைக்ராப்ட்ஸ் ரோட், பி. டி. பாணி & கம்பெனியில் பெற்றுக்கொள்ளலாம்.

## His Holiness in 1914 Kumbakonam



1914-ம் வருஷத்தில் ஸ்ரீ வாமிகள், கும்பகோணம்

* * * * *

ஸ்ரீசங்கரபகவத்பாதாள் திக்விஜயம் செய்து, ஸ்ரீசக்ராகாரமாக காஞ்சிபுரத்தை பிரதிஷ்டை செய்து, அதன் மத்தியில் காம கோடி பீடத்தையும் ஸ்தாபித்து கோயிலையும கட்டுவித்தார் கள். இதுவே ஸ்ரீமடத்தின் மூலஸ்தானம். கட்டிடம் வெகு புராதனமானதால் ரூ50,000 வரை சிலவு செய்து, திருப்பணி கும்பாபிஷேகஞ்செய்ய நமது ஆசாரியாள் ஏற்பாடு செய் திருக்கிறார்கள்.

His Holiness at Kumbakonam, 1914.



1914ஸு கும்பகோணத்தில் ஸ்ரீஸ்வாமிகள் சிலகாலமே தங்கினார்கள்.

* * * * *

"புருஷ ஜன்மம் விசேஷமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்திரீகள் முக்தியடைய சுலபமான வழி சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் அவர்களுடைய ஜன்மமே விசேஷமென்று தோன்றுகிறது. புருஷர்கள் கர்மானுஷ்டானம், குரு ஸேவை முதலியன செய்து, ஞானம் சம்பாதித்து, மோக்ஷமடைய வேண்டும். ஸ்திரீகள் பதிபக்தியால் வெகு சுலபமாக மோக்ஷமடைந்து விடலாம். 'நீ உன் புருஷனை வழிபடு.' நான் அவனிடமிருந்து அதை ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

சென்னை—24-10-32.

The Athishtanam of Sri Paramasivendra Saraswathi Swami at Tiruvangadu, near Shiyali, S.I.Ry.




பிரம்ம ஸூத்ர விருத்தி" முதலிய உயர்ந்த வேதாந்த நூல்களை இயற்றிய ஸ்ரீஸதாசிவேந்திர ஸரஸ்வதி அவர்களின் குருவான பரமசிவேந்திராளின் அதிஷ்டானம். தென்னிந்திய ரயில் பாதையில் சீர்காழி ஸ்டேஷனுக்கடுத்த திருவெண்காடு என்ற க்ஷேத்திரத்திலுள்ளது.

* * * * *

"சிவ வழி பாட்டால் பிறப் பறுக்கலாம்."

சென்னை—11-10-32.

# AN APOLOGIA.

Ever since the accession of the present Jagathguru to the Kama Koti Peetam in 1907, it has been my precious privilege to go to Him frequently to pay my respects. Of the thousand and one characteristics of His magnetic personality which all of us see and so much revere, His saintliness, His spirituality and His extreme self.-denial, appeal to me most and have prompted me to more frequent pilgrimages to Him. These events, I would at first look forward to, with eagerness and afterwards, cherish with much pleasure and delight. Now, with me they have become a source of permanent joy which I can ill-afford to miss with peace of mind.

Unfortunately, "the business of getting and spending in which we lay waste our powers" has cast my lot in this city. Through all the stress and strain of city life which dim our inner vision and stifle our spiritual instincts, the thought of His Holiness and the reminiscences of the qiuet and inspiring talks with Him—a privilege which He, in His generous affection, has vouchsafed to me—have borne me up. I have been longing for the day when I could have the privilege of listening to His sweet and ennobling discourses in company of my brothers and sisters in this city itself. This day, after many hopes and disappointments, came off on—28—9—32. To me it is a holy day and a sacred memory. This Souveneir is intended to commemorate it.

The extracts given in these pages have been culled from His Holiness' lectures and private conversations and if only friends who chance to get a copy of this booklet will kindly go through them and imbibe to some extent at least the spirit contained in them, I will feel myself greatly honoured. I lay these books at the feet of His Holiness as the humble offering of one of His most devoted disciples.

Mylapore
13—1—33

T. V. Isvara Sastri.

# தாழ்ந்த விண்ணப்பம்

---

1907-ம் வருடத்தில் நமது ஆசார்யாள் காமகோடிபீடத்தை யலங்கரிக்க ஆரம்பித்தது முதல் அவர்களை யடிக்கடி தரிசிக்கும் பாக்யம்நான் பெற்றுளேன். அம்மகானின் அரிய குணாதிசயங்களில் அவர்களின் துறவறத்தின் மகத்வமும், தெய்வத் தன்மையின் பெருமையும், வைராக்யத்தின் மேன்மையும் என் மனத்தைக் கவர்ந்ததின் காரணமாக, இப்புவியில் ஜன்ம மெடுத்துப் பசி யென்றும், பணமென்றும் ஸதா அலைந்து திரியும் நம்போன்றவர்களுக்கு, கடவுளுக்கொப்பான இத்தகைய பெரியோரை தரிசித்து ஜன்மத்தை ஸபலமாகச் செய்துகொள்வதைக் காட்டிலும் வேறு மேலானது ஏதுளது என்று அடிக்கடி நான் நினைப்பதுண்டு. நேராக அவர்களிடம் போகும் பொழுதெல்லாம் அன்பும் கருணையும் உரு வெடுத்துவரும் அவர்களின் வார்த்தைகள் என்னைப் பேரானந்தத்தில் ஆழ்த்திவிடும். அக்காலங்களில் இம்மாதிரி சந்தோஷத்தை இச்சென்னையிலுள்ள என் நண்பர்களும் மற்றவர்களும் அநுபவிக்கச் சந்தர்ப்பம் எப்பொழுது நேரிடுமென்று நான் அவா கொள்வதுண்டு. பன்னெடும் நாட்கள் காத்திருந்து இச்சந்தர்ப்பம் கடைசியாக 28-9-32 ல் வாய்த்தது. இம்மங்களகரமான தினத்தை எப்படிக் கொண்டாடலாம் என்று யோசிக்கும்பொழுது இந்நாள் ஞாபகார்த்தமாக இப்புத்தகத்தை வெளியிடுவதை விட வேறொன்றும் எனக்குப் புலப்படவில்லை; ஆகையால் அங்ஙனம் செய்துளேன். ஆஸ்திக சிரோமணிகள் இதிலிருக்கும் ஆசார்யாளின் உபதேச வாக்யங்களைப் படித்துக் கொஞ்சமாவது அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவார்களாயின் என் மனோரதம் நிறைவேறும். இப் புத்தகங்களை ஸ்ரீ ஜகத்குரு பாதாரவிந்தங்களில் தாஸன் கொண்டுள்ள பக்திக் கடையாளமாக வணக்கத்துடன் ஸமர்ப்பிக்கிறேன்.

திருமயிலை<br>13—1—33

தி. வெ. ஈச்வர சாஸ்திரி.

## The Jagathguru Mutt at Kumbakonam.
## Head quarters from 1821 A.D.

கும்பகோணத்தில் ஸ்ரீமடம். 1821ல் அச்சமயம் தஞ்சை அரசரான ஸ்ரீசரபோஜி ராஜா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ராஜா அவர்களால் காவேரி ஆற்றங்கரையில் நிர்மாணம்செய்யப்பட்ட இந்த கட்டிடத்தில் ஸ்ரீமதாசாரியாள் வசிக்க ஆரம்பித்தார்கள். இக்கட்டிடம் இப்பொழுது கருங்கல்லால் ஏராளமான சிலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

*　　*　　*　　*　　*

“நாம் அத்வைதத்தை நம்பிக்கொண்டு த்வைதத்தை அனுபவிக்கிறோம். த்வைதம் இந்திரியங்களால் தெரிவிக்கப்படுகிறது. அத்வைதம் வேதாந்தத்தால் தெரிவிக்கப்படுகிறது. சூரியன் ஆயிரம் கோடி மைல் விஸ்தீரணமுள்ளதென்று சாஸ்திரம் சொல்லுகிறது; ஒருசாண் விஸ்தீரணமுள்ளதென்று கண் சொல்லுகிறது. கண்ணால் தெரிவிக்கப்படுவது த்வைதம். வேதாந்தத்தால் தெரிவிக்கப்படுவது அத்வைதம்.”

சென்னை—11-10-32.

